**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வள்ளியூர்**

முன்னிலை: திரு ஜெ.ஆன்ஸ் ராஜா பி.ஏ, பி.எல்.,

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி ,

வள்ளியூர்

2025 ஆம் வருடம் பிப்ரவரி மாதம் 03-ஆம் நாள் திங்கள்கிழமை

திருவள்ளுவர் ஆண்டு 2056 குரோதி வருடம் ஐப்பசி மாதம் 21-ம் நாள் திங்கள்கிழமை

**இ.ம.எண்.05/2024 ன் அ.வ.எண்.16/2021**

1) மரியம்மாள் ... மனுதாரர்/ வாதி

2) விஜி .... 3 ம் தரப்பு / உத்தேச 2 ம் வாதி

/எதிர்/

1) மைக்கிள் சோபியா .... எதிர்மனுதார்/பிரதிவாதி

2) பீட்டர் .... 3 ம் தரப்பு/ உத்தேச 2 ம் பிரதிவாதி

இம்மனுவானது 20.01.2025 தேதி அன்று என் முன்னால் இறுதியாக விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.சுபாஷ் அவர்கள் ஆஜராகியும், 1வது எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.V. ராம்நாத் ஐயர் அவர்கள் ஆஜராகியும், 2 வது எதிர்மனுதாரர் ஒருதலைபட்சமாகியுள்ள நிலையிலும், இருதரப்பு வாத உரையை கேட்டும் சாட்சி மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

**உத்தரவு**

மனுதாரரால் இம்மனுவானது இம்மனுவில் குறிப்பிட்டுள்ள நபர்களை அசல் வழக்கில் கட்சி சேர்க்க உத்தரவிட வேண்டி கட்டளை 1 விதி 10 (2)-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

JAYANDRAN ANNSRAJA

Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2025.02.03 17:51:45 +0530

1. **மனுவின் சுருக்கம்**:

மனு தபசில் சொத்தும் வேறு சில சொத்துக்களும் அந்தோணி நாடார் மகள் தேவாயி என்பவருக்கு 30.09.1971 தேதியிட்ட கிரைய ஆவணம் மூலம் பாத்தியப்பட்டது. மேற்படி தேவாயி அம்மாளுக்கு திருமணமாகவில்லை. ஆகையால் அவருக்கு நேரடி வாரிசுகள் இல்லை. மேற்படி தேவாயி அம்மாள் மனுதாரர் மீது மட்டும் தனிப்பட்ட வகையில் அன்பு செலுத்தி வந்ததோடு தேவாயி அம்மாளின் சொத்துக்களையும் அவரது காலத்திற்கு பின்னர் மனுதாருக்கு மட்டும் தான் சேர வேண்டும் என மரியம்மாளிடமும் மற்ற ஏனைய குருதிவழி உறவினர்களிடமும் தெரிந்த நபர்களிடமும் தேவாயி அம்மாள் கூறி வந்தார்.

கடந்த 13.10.2010 அன்று மேற்படி தேவாயி அம்மாள் மனுதாரர் மீது கொண்டுள்ள அன்பு மற்றும் பற்றுதல் மற்றும் நம்பிக்கை காரணமக அவருக்கு சொந்தமான தபசில் கண்ட குடியிருப்பு வீட்டு சொத்தையும், மற்ற விவசாய சொத்துக்களையும் பொறுத்து உயில் எழுதி வைக்க வேண்டும் என்று விரும்பினார். அப்போது தேவாயி அம்மாளுக்கு 80 வயது ஆகியிருந்தது. தேவாயி அம்மாள் விருப்பப்படி சில தகுதி வாய்ந்த சாட்சிகள் முன்னிலையில் வைத்து நல்ல சுய அறிவுடனும், புத்தி சுவாதீனத்துடனும், யாருடைய தூண்டுதலுமின்றி ஒரு உயில் சாசனத்தை எழுதி வைத்து தபசில் சொத்துக்களும், வேறு சொத்துக்களும் தேவாயி அம்மாளின் ஆயுளுக்கு பின்னர் மனுதாரருக்கு பூரணமாக சேர்ந்து ஆண்டனுபவித்து கொள்ள வேண்டியது என்று உயில் சாசனம் ஒன்றை எழுதி வைத்தார். அதுவே இறுதி உயில் சாசனமாகும். மேற்படி உயில் ஆவணமானது 16.08.2013 அன்று தேவாயி அம்மாள் இறந்தவுடன் அமலுக்கு வந்துவிட்டது. தற்போது எதிர்மனுதாரர் தனது தாயார் சிலுவை ரத்தினம் என்பவருடன் சேர்ந்து தபசில் வீட்டை அபகரிக்க வேண்டி

JAYANDRAN ANNSRAJA
Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2025.02.03 17:51:53 +0530

ஒரு போலியான பத்திரத்தை உருவாக்கி 15.10.2013 அன்று வள்ளியூர் சார்பதிவு அலுவலக ஆவண எண்.3415/2013 ஆக பதிவு செய்துள்ளார்கள். எனவே, வள்ளியூர் சார்பதிவக ஆவண எண்.3415/2013 செல்லத்தக்கதல்ல என விளம்புகை பரிகாரம் கோரி அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு, மேற்படி வழக்கானது 07.12.2022 அன்று ஆவண எண்.3415/2011 செல்லாது என உத்தரவு வழங்கி உத்தரவிடப்பட்டது. அதன்படி மனுதாரர் அவரது மகளான விஜி என்பவருக்கு மனு தபசில் சொத்தை பொறுத்து கடந்த 17.04.2023 தேதியன்று செட்டில்மெண்ட் ஆவணம் பிறப்பித்து கொடுக்கப்பட்டுள்ளது. ஆகையால், மனுதாரரின் மகள் விஜி மேற்படி வழக்கிற்கு அவசியமான தரப்பு ஆவார். அதுபோல் மேற்படி பிரதிவாதியான மைக்கிள் சோபியா என்பவர் தனது தாயார் சிலுவை ரத்தினம் என்பவருக்கு கடந்த 15.10.2013 அன்று செட்டில்மெண்ட் ஆவணம் போலியாக எழுதி கொடுத்துள்ளார். மேற்படி சிலுவை ரத்தினம் தற்போது காலம் சென்றுவிட்டார். அவருக்கு பிரதிவாதியும், பீட்டர் என்கிற மகனும் வாரிசுகள் ஆவார்கள். மேற்படி பீட்டர் இவ்வழக்கிற்கு அவசிய தரப்பினர் ஆவார். எனவே, மனுதாரரின் மகளை 2ம் வாதியாக கட்சி சேர்க்க வேண்டியும், பீட்டர் என்பவரை 2ம் பிரதிவாதியாக கட்சி சேர்க்க வேண்டியது அவசியமாக உள்ளது என மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

2. 1வது எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்படும் எதிர்சாற்றுரையின் சுருக்கம்:

மனுதாரரின் மனு சட்டப்படிக்கும் நியாயப்படிக்கும் செல்லத்தக்கதல்ல. வழக்கு சொத்தை மனுதாரரின் மனுவின்படி விஜி என்பவருக்கு செட்டில்மெண்ட் மூலம் பதிவு செய்து கொடுத்த பின்பு இந்த மனுதாரர் இந்நீதிமன்றத்தில் இந்த வழக்கை தாக்கல் செய்ய அருகதை அற்றவர் ஆவார். வழக்கு சொத்துக்கள் மனுதாரரின் பெயரிலேயே இல்லை

JAYANDRAN ANNSRAJA
Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2025.02.03 17:52:02 +0530

என்று மனுதாரரே ஒப்புக்கொண்ட பின்பு வேறு நபர்களை கட்சி சேர்க்க மனுதாரருக்கு சட்டப்படி அருகதை கிடையாது. மனுதாரர் இந்த வழக்கை பின்எடுத்துவிட்டு விஜி என்பவர் விரும்பினால் வேறு புதிய வழக்கு தாக்கல் செய்வதை தவிர வேறு வழிவகை கிடையாது. மனுதாரரும் விஜி என்பவரும் கூட்டு சேர்ந்து கொண்டு இந்த எதிர்மனுதாரருக்கு எதிராக கூட்டு சதியில் ஈடுபட்டுள்ளனர். எனவே, இம்மனுவானது தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

**இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா?**

இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. மனுதாரர் தரப்பில், மனுதாரர் அவரது மகளான விஜி என்பவருக்கு மனு தபசில் சொத்தை பொறுத்து கடந்த 17.04.2023 தேதியன்று செட்டில்மெண்ட் ஆவணம் பிறப்பித்து கொடுத்துள்ளார். அதுபோல் மேற்படி பிரதிவாதியான மைக்கிள் சோபியா என்பவர் தனது தாயார் சிலுவை ரத்தினம் என்பவருக்கு கடந்த 15.10.2013 அன்று செட்டில்மெண்ட் ஆவணம் போலியாக எழுதி கொடுத்துள்ளார். மேற்படி சிலுவை ரத்தினம் தற்போது காலம் சென்றுவிட்டார். அவருக்கு பிரதிவாதியும், பீட்டர் என்கிற மகனும் வாரிசுகள் ஆவார்கள். மேற்படி பீட்டர் இவ்வழக்கிற்கு அவசிய தரப்பினர் ஆவார். எனவே, மனுதாரரின் மகளை 2ம் வாதியாக கட்சி சேர்க்க வேண்டியும், பீட்டர் என்பவரை 2ம் பிரதிவாதியாக கட்சி சேர்க்க வேண்டியது அவசியமாக உள்ளது என கூறியுள்ளார்.

ஆனால் 1வது எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கு சொத்துக்கள் மனுதாரரின் பெயரிலேயே இல்லை என்று மனுதாரரே ஒப்புக்கொண்ட பின்பு வேறு நபர்களை கட்சி சேர்க்க மனுதாரருக்கு சட்டப்படி அருகதை கிடையாது. மனுதாரர் இந்த வழக்கை பின்

JAYANDRAN ANNSRAJA

Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2025.02.03 17:52:10 +0530

எடுத்துவிட்டு விஜி என்பவர் விரும்பினால் வேறு புதிய வழக்கு தாக்கல் செய்வதை தவிர வேறு வழிவகை கிடையாது. எனவே இவ்வழக்கிற்கு மேற்படி விஜி என்பவர் அவசியமற்ற தரப்பினர் ஆவார் என்று கூறியுள்ளார்.

மேலும், அசல் வழக்கானது விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளதாலும், மனுதாரருக்கு அவரது தரப்பை நிரூபிக்க வேண்டி ஒரு வாய்ப்பு அளிக்க வேண்டும் என்ற பட்சத்தில் இம்மனுவானது அனுமதிக்கத்தக்கது. இம்மனுவின் உத்தேச தரப்பினர்களை அசல் வழக்கில் சேர்க்க அனுமதிப்பதினால் எதிர்மனுதாரர் எந்த பாதிக்கும் உள்ளாகமாட்டார்கள்.

இறுதியாக, இம்மனு அனுமதிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2025 ம் வருடம் பிப்ரவரி மாதம் 03-ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

JAYANDRAN ANNSRAJA
Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2025.02.03 17:52:17 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வள்ளியூர்.

மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்: இல்லை

எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள்: இல்லை

JAYANDRAN ANNSRAJA
Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2025.02.03 17:52:25 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வள்ளியூர்.

முு.மா.உ.நீதிமன்றம்,வள்ளியூர்,

வரைவு, சீரான உத்தரவு

இ.ம.எண்.05/2024 இன்

அ.வ.எண்.16/2021

தேதி.03.02.2025